[12th February 1959

Salaries of Tutors and Professors of Government Colleges

* 247 *Q.*—Sri M. KALYANASUNDARM (on behalf of Sri N. K. Palanisami): Will the Hon. the Minister for Finance be pleased to state the present stage of the proposal to raise the salaries of Tutors and Professors in the Government Colleges in the State?

The Hon. Sri C. SUBRAMANIAM: There is no proposal before Government now to raise the salaries of Tutors and Professors in the Government Colleges in the State.

Sri M. KALYANASUNDARAM: ஸர், யூனிவர்ஸிட்டி கிராண்ட் கமிஷன் சிபாரிசு செய்த விகிதத்தில் சம்பளங்கள் கொடுக்கப்பட்டு விட்டனவா என்பதை அறிய விரும்புகிறேன்?

The Hon. Sri C. SUBRAMANIAM: யூனிவர்ஸிட்டி கிராண்ட் கமிஷன் சிபாரிசு செய்ய முன்வந்திருப்பது கவர்ன்மெண்ட் காலேஜ்களுக்கு அல்ல, தனிப்பட்டவர்கள் நடத்தும் காலேஜ்களுக்குத்தான், அது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

Assignment of darkhast lands to the landless poor and the Harijans

* 248 *Q.*—Sri P. G. MANICKAM: கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

சென்னை இராஜ்யத்திலிருக்கும் நிலமில்லாத ஏழைகளுக்கும், ஹரிஜனங்களுக்கும், தற்காஸ்து நிலங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக எந்தெந்த ஜில்லாக்களிலே ஸ்பெஷல் தாசில்தார்களும், சம்பந்தப்பட்ட இதர கிளார்க்குகளும், சிப்பந்திகளும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்?

The Hon. Sri M. A. MANICKAVELU: Special staff for the purpose of speeding up assignment of waste lands at the disposal of Government has been sanctioned in all the districts except Chingleput, Tirunelveli, Ramanathapuram and Kanyakumari.

Sri P. G. MANICKAM: ஸர், கோயம்புத்தூர் ஜில்லாவுக்கு ஸ்பெஷல் தாசில்தார்களும், மற்ற சிப்பந்திகளும், இதரர்களும் நியமிக்கப்பட்டுவிட்டார்களா?

The Hon. Sri M. A: MANICKAVELU: ஆமாம், கோயம்புத்தூர் ஜில்லாவுக்கு ஒரு டெப்டி தாசில்தார், மூன்று ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், மற்றும் இதரர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

Sri G. G. GURUMURTHI: ஸர், இப்போது நியமிக்கப்பட்டிருக்கும் டெப்டி தாசீல்தார் அவர்களினாலும், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களினாலும் இதுவரை எல்லா நிலங்களையும் பட்டா செய்து கொடுக்க முடியவில்லை. இன்னும் கொஞ்ச நாட்களுக்கு அவர்கள் அங்கேயே இருக்க வேண்டும் என்று ஏதாவது மனுக்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றனவா? அப்படியென்றால் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

The Hon. Sri M. A. MANICKAVELU: இதைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்களின் சிபாரிசு இல்லாமலேயே, அவர்களுக்கு அங்கு இன்னும் வேலை இருக்கும் என்று கருதினால் அவர்கள் தொடர்ந்து அங்கு இருந்து வேலை செய்து வருவார்கள்.